# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 30 புதன்கிழமை 16.10.2024 கதிர் 389







# ஈஸ்ட்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை பகிரங்கமாக வெளியிடுவதற்கு அரசு தயாரா?

## கேள்வி எழுப்புகின்றார் உதயகம்மன்பில



அரசாங்கம் பகிரங்கமாக வெளியிடுவதாக உறுதியளித்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்தன்னிடமுள்ளஇதுவரைவெளியிடப்படாத இரண்டு அறிக்கைகளையும் கையளிக்க தயார் என முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

என்னிடமுள்ள அறிக்கையை பெற்றுக்கொண்ட பின்னர்அதனைஅரசாங்கம்பகிரங்கப்படுத்தாவிட்டால் என்னநடக்கும்என்று,அவர்கேள்விஎழுப்பியுள்ளார்.

ஜனாதிபதியோ அமைச்சரவை பேச்சாளரோ தான் வழங்கும் அறிக்கைகளை வெளியிடுவோம் என்று உறுதியளிக்கும்வரை தான் அரசாங்கத்திடம் அவற்றை கையளிக்க தயாரில்லை என்றும் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

நான்வேண்டுகோள்விடுத்தபடிஏழுநாட்களிற்குள் அறிக்கைகளைவெளியிடுவதற்கானநடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காவிட்டால் தான் அவற்றை இணையத்தில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# அடுத்த கட்டத்துக்கு தமிழ்த் தேசியத்தை வழிநடத்துபவரே எம்.பி.யாக வேண்டும்

## வலியுறுத்திக் கூறுகிறார் அரியநேத்திரன்



பெயருக்கு நடிப்புக்கு நாடகத்துக்கு எங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையில்லை. சேவை செய்யக்கூடியவராக இருக்கவேண்டும், உறுதியானவராக இருக்கவேண்டும். அத்த கட்டத்துக்கு தமிழ் தேசியத்தை வழிநடத்தக் கூடியவராக இருக்கவேண்டும்என்று இலங்கைதமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினருமான 2 ➤

# ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் இன்று



(வி.ரி. சகாதேவராஜா)

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை நடைபெற்றது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட 2 ➤

# அரசியலிலிருந்து ஓய்வு பெற தயாராக இல்லை

## தனது ஓய்வு தற்காலினமானது என்கிறார் மஹிந்த



அரசியலில் இருந்து தான் ஓய்வு பெறத் தயாராக இல்லை என்றும், தனது ஓய்வு தற்காலிகமானது என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

“பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று நான் நினைத்தேன், ஆனால் அரசியல்வாதிகள் உண்மையிலேயேஓய்வு பெறமாட்டார்கள்” என்று அவர் கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, அனைத்தும் தயாராக இருப்பதாகவும்,சிறிலங்கா பொதுஜன பெரமுன இலகுவான வெற்றியைப் பெறும் எனவும் தெரிவித்தார். 2 ➤

# அனைத்து ஓய்வூதியர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவு இன்று முதல்

அனைத்து ஓய்வூதியர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவான 3000 ரூபாவை இன்று முதல் வழங்க ஓய்வூதிய திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

ஓய்வூதியர்களுக்கான மாதாந்த இடைக்காலகொடுப்பனவான 3000 ரூபா வழங்கப்படாமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அதற்கானபணத்தைதிறைசேரியிலிருந்து வழங்குமாறு அண்மையில் பணிப்புரை விடுத்தார்.

அந்த அறிவுறுத்தலின்படி, திறைசேரியிலிருந்து ஓய்வூதியத் திணைக்களத்திற்குத் தேவையான பணம் வழங்கப்பட்டு, ஓய்வூதியர்களின் கணக்கில் இன்று முதல் வரவு வைக்க ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து ஓய்வூதியர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக ரூ.3000 வழங்குவதற்கு 08/24/2024 தேதியிட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2024 வெளியிடப்பட்ட போதிலும், அதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திறைசேரி நடவடிக்கைதிணைக்களத்தினால்679,960 ஓய்வூதியர்களுக்கு இம்மாதத்திற்கான 2021 மில்லியன் ரூபாவை ஓய்வூதிய திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று அரசு மற்றும் தனியார் வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளதுடன், தபால்நிலையங்கள்மற்றும்கல்லூரிகளில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் இந்த உதவித்தொகையை பெற முடியும்.

# 30 ஆம் திகதிக்கு முன் வீடுகளை ஒப்படைக்காக விட்டால் வழக்கு

## முன்னாள் அமைச்சர்களுக்கு எச்சரிக்கை

அரச வீடுகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்காவிட்டால் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் நீதி, பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் தொழிலாளர் அமைச்சின் செயலாளர் நேற்று கடிதம் அனுப்பியுள்ளார்.

அரச வீடுகளை உடனடியாக கையளிக்குமாறு முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு பல நினைவூட்டல்கள் வழங்கப்பட்ட போதிலும், நேற்று வரை 11 பேரே வீடுகளை கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு கொழும்பு 7 பகுதியில் 40 வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை வழங்குவதில் செலவினங்களை குறைக்கும் வகையில் அனைத்து விடயங்களையும் மீளாய்வு செய்து புதிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போதய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அர்ஜுன் அலோசியஸின் பிணை மனு நிராகரிப்பு



அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய 3.5 பில்லியன் ரூபா பெறுமதி சேர் வரியை செலுத்த தவறிய வழக்கில், 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள டபிள்யூ. எம். மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவரை பிணையில் விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரசிக்சரூக், நீதிமன்றத்தில் காரணங்களை முன்வைத்து, இந்த பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு குற்றவியல் வழக்காக மாறியுள்ளதால் அவர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

தீர்ப்பை அறிவித்த மேலதிக நீதவான் பண்டார இளங்கசிங்க, இது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சான்றிதல் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட வழக்கு என தெரிவித்தார்.

இது ஒரு மாற்றுத் தண்டனை என்பதாலும், குற்றவியல் வழக்காக இல்லாததாலும் பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்படுவதாகவும் இதன்போது நீதவான் குறிப்பிட்டார்.

# பொலிஸ் அதிகாரியின் வீட்டில் திருடிய கும்பலில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவாலிப் பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன களவாடிய சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று கைது செய்த யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார், மேற்படி நபரிடம் இருந்து மூன்றரைப் பவுண் நகையை மீட்டனர்.

கடந்த வாரம் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டின் குளியலறை ஊடாக உள்நுழைந்த திருடர்கள், ஆறரைப் பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர.

பிரதான சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

### அடுத்த கட்டத்துக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஞா.சிறிநேசன் வெற்றிபெறச்செய்வதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய பணிகள் தொடர்பில் ஆராயும் கூட்டம் செவ்வாய்க்கிழமை வவுணதீவில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மண்முனை மேற்கு கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு கிளையின் தலைவர் பி.கோபாலபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் உட்பட கிளை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அரியநேத்திரன், “இலங்கை தமிழரசுக் கட்சி நீண்டகாலத்திற்கு பின்னர் தனித்துவமாக இந்த தேர்தலில் போட்டியிடும் நிலைமை இருக்கின்றது. தேர்தலில் நிச்சயமாக இலங்கை தமிழர்களுக்கு மூன்று ஆசனங்களை பெறுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அந்த மூன்று ஆசனங்களை பெறுவதுதான் நோக்கம் அல்ல.

ஆசனங்களை பெறுவதில் அந்த ஆசனத்தில் வரக்கூடியவர்கள் யார் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். இலங்கை தமிழரசுக் கட்சியின் இன்று பல்வேறுபட்ட இன்னல்கள், பிளவுகள் சட்டங்கள் வழக்குகள் என்று போடப்பட்டிருக்கின்றது. நேற்று ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த காரணங்களை நாங்கள் பார்க்கின்ற போது அதிலே நேர்மையானவர்கள், உண்மையானவர்கள், உறுதியானவர்கள் பற்றாளர்கள் அந்த கட்சியிலே இல்லாததன் காரணமாக இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் இலங்கை தமிழர் கட்சி மாத்திரம் வெற்றி பெறக் கூடாது. இலங்கை தமிழர் கட்சியிலிருந்து செல்கின்ற உறுப்பினர்கள் உறுதியானவர்களாக உண்மையானவர்களாக நேர்மையானவர்களை நாங்கள் இனங்காணவேண்டும்.

நான்கு உறுப்பினர்கள் இந்த மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது 2004 ஆம் ஆண்டு மாத்திரம் தான் இருந்தது. அதில் தான் நான்கு பேர் நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டோம்.

மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றம் செல்வது அவசியமாகும். அதன்காரணமாகவே சிறிநேசன் அவர்களை வெற்றிசெய்யவேண்டும் என்று உழைக்கின்றோம்” என்றும் அரியநேத்திரன் தெரிவித்தார்.

### ஜனநாயக தமிழ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணைப்பாளர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் இவ் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

அம்பாறையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான சோமசுந்தரம் புஸ்பராஜா ,சபாபதி நேசராசா, கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை , கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரன், சிந்தாத்துரை துரை சிங்கம், சுப்பிரமணியம் தவமணி, தியாகராஜா கார்த்திக் ,ராஜகுமார் பிரகாஷ் ,செல்லத்தம்பி புகனேஸ்வரி, பாலசுந்தரம் பரமேஸ்வரன் ஆகியோர் சுயஅறிமுகம் செய்து உரையாற்றினர்.

### ழிஅரசியலிலிருந்து ஓய்வு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“அரசியல்வாதிகள் ஓய்வு பெறத் தொடங்குகிறார்கள் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறியதை நான் கேட்கவில்லை, அரசியல்வாதிகள் இப்போது முதல் முறையாக ஓய்வு பெற ஆரம்பித்துள்ளனர் என்பதில் எனக்கு உடன்பாடில்லை” என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

“ஜனாதிபதித்தேர்தலில்போட்டியிடாதஅரசியல்வாதிகள் ஏராளம் பேர் உள்ளனர்’’ என்றும் தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ,“நாடாளுமன்றத்தில் 113 ஆசன பெரும்பான்மையை பொதுஜன பெரமுன கட்சியால் இலகுவாகப் பெற முடியும்” என்றும் மேலும் கூறினார்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# 13 ஆவது திருத்தமோ, அதிகாரப் பகிர்வோ வட பகுதி மக்களுக்கு அவசியமில்லை

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிப்பு



"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும், அதிகாரப் பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல. அவர்களுக்கு அவர்களின் பொருளாதாரப்பிரச்சினைகளுக்கே தீர்வு அவசியமாக உள்ளது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள இந்த விடயங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்" என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்தக் கருத்துக்களைக் கூறியிருக்கின்றார் "வடக்கில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. மொழி ரீதியான பிரச்சினை அங்கு உள்ளது. அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் தாம் விரும்பும் மொழியில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாதுள்ளது" என்று தெரிவித்த ரில்வின் சில்வா, "கொழும்பை மையப்படுத்தியுள்ள சில வசதி, வாய்ப்புகள் வடக்குக்குச் செல்வதில்லை" என்றும், "யாழ்ப்பாணத்தில் ஓரளவு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள போதிலும் கிளிநொச்சி, வவுனியா அல்லது முல்லைத்தீவில் வாழும் மக்கள் மிகவும் கஷ்டமான வாழ்கையையே வாழ்கின்றனர்" என்றும் அவர் தெரிவித்தார்.

"அங்குள்ளவர்கள் கல்வி முதல் அனைத்து விடயங்களையும் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். இந்த மக்கள் மிகவும் வறுமைக்குஉட்பட்டவர்களாக உள்ளனர். தெற்கில் இருந்து வடக்குக்குச் செல்லும் பாதை அழகாக உள்ளது. பாதையின் இருபுறங்களிலும் கடைகள் உள்ளன. ஆனால், பாதையைத் தாண்டி உள்ளே சென்றால் வீடுகள் இல்லை. மக்கள் வறுமையாகவும்தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதும் வாழ்கின்றனர்" என்று ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் சிலர் வெளிநாடுகளில் இருப்பதால் ஓரளவு பொருளாதாரம் உள்ளது. ஆனால், வவுனியா அல்லது கிளிநொச்சி சென்றால் அங்கு பொருளாதாரம் இல்லை. முல்லைத்தீவில் வாழும் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்" என்றும் தெரிவித்த ரில்வின் சில்வா, "விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழங்களையும், மரக்கறிகளையும் விற்பனை செய்துக்கொள்ள உரிய சந்தை வாய்ப்புகள் இல்லை. வேலைவாய்ப்புகள் மிகவும் குறைவாகும்" என்றும் அவர் தெரிவித்தார்

"தெற்கில் இருந்து அங்கு சென்று சுற்றுலாவில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்" என்று தெரிவித்த ரில்வின் சில்வா, "ஆனால், அங்குள்ள மக்களின் வாழ்கை முள்ளின் மேல் உள்ளது" என்றும் மேலும் தெரிவித்தார்






# மிதி வெடி

எல்லாம் ஒரே குழப்பமா இருக்குது பாருங்கோ.... ஆறு பேரைத் தெரிவு செய்யுறதுக்காக முந்நூற்றிச் சொச்சப் பேர் போட்டியிடுகினம். சிநேகிதம் – சொந்தம், பந்தம், அயல் எண்டு எல்லாருமே ஏதோ ஒரு வகையில அறிமுகமான ஆக்களா வேற இருக்கினம். ஆருக்குப் போடுறதெண்டு மண்ட குழம்பிப் போயிருக்கிறம்.

ஆரைக் கேட்டாலும் தான் "பார்ளிமென்ற்" போறது உறுதி எண்டுகினம்... அப்பிடிப்பாத்தா... யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே 396 "சீற்" வேணுமெல்லோ...? என்ன நடக்குதெண்டு பாப்பம்.... எங்களுக்கென்ன.... அவை கூத்தடிப்பினம்... நாங்கள் கொண்டாடுவம்.

போன கிழமை "அந்த" வைத்தியர் ஒரு "பிரஸ்மீற்" வைச்சவரெல்லே.... அதில அந்தாள் சொன்னது தான் எனக்குச் சிரிப்பா இருந்தது... "எலக்சன்" கேக்கிற எல்லாருமே தனக்னொரு "சீற்" வருமெண்டு சொல்லேக்க இந்தப் பெடி மட்டும் ஆறு சீற்றும் எனக்குத் தான் எண்டு சொல்லுது.... ஒரு வேளை... இந்தாள் சொல்லுறதிலயும் ஒரு சூட்சுமம் இருக்குமோ.....?

ஏனெண்டாப் பாருங்கோ..... அந்தாள் ஆதரிக்காத கட்சி இல்லைத் தானே? ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில... "நாடு அநுரவோடு... நானும் அவரோட" எண்டு "லைஃப்" விட்டவர்.... கொஞ்ச நாளில "நான் தமிழண்டா" எண்டு சங்கூதினார்.... அதுக்கு முதல் "தாடித் தலைவரே தன் தெய்வம்" எண்டார்... "சஜித் சேர்" வடக்கைப் பாக்கச் சொல்லி இருக்கிறார் எண்டு சொன்னார்... இப்பிடி அந்தாள் ஆதரிக்காத கட்சி இல்லை... அப்பிடிப்பாத்தா எந்தக் கட்சிக்கு "சீற்" கிடைச்சாலும்... அந்தாளிண்ட ஆக்கள் தானே ஆறு பேரும் எண்டு நிறுவலாம் தானே?

ஆனாலும்... சும்மா சொல்லப்படாது பாருங்கோ.... அந்தச் சுயேச்சைக்கு ஒரு சீற் வந்தாலும் வருமெண்டு இங்கின இருக்கிற டாக்குத்தர் மார் எல்லாம் பீதியில இருக்கினமாம்.... சும்மாவே அளப்பறை பண்ணுறவர்... "பார்ளிமென்ற்" போனா என்னென்னத்தைத் தோச்சுத் தொங்க விடுவாரோ எண்ட பயம் தான்....

உண்மையும் அதானே...? போன கிழமையும் யாழ்ப்பாணத்தில இருககிற ஒரு ஆசுப்பத்திரியில நடக்கிற கட்டிட வேலைக்கு தலைமைப் பொறுப்பில இருக்கிறவர் உட்பட அங்க வேலை செய்யிறவை எப்பிடி எல்லாம் பணம் பண்ணுகினம் எண்டு என்ர ரெண்டு காதாலையும் கேட்டு – கண்ணால கண்டனான்.... உப்பிடிக் கொந்தவைக்கு ஒரு "ஊசி" இல்லை ஒன்பதாயிரம் ஊசி போட்டாலும் திருந்த மாட்டினம் பாருங்கோ.......

நகரத்தில இருக்கிற ஒரு "பெயின்ற்" கடைக்கு போனனான்... ஒரு "லீற்றர் அன்ரிகுரஸ்" வாங்க.... அந்த நேரம் ரெண்டு ஐயா மார் அரசாங்க இலச்சினை பொறிச்ச வாகனத்தில வந்திறக்கிச்சினம்.... கவனிப்பெண்டா... அப்பிடி ஒரு கவனிப்பு.... அந்தக் கடையும் ஒரு அரசாங்கத்தில வேலை செய்யுற பெரீய அதிகாரியின்ற கடைதான். அரசாங்க அதிகாரிமார் எண்டதால அந்தக் கவனிப்போ எண்டு நினைச்சன்... அப்பிடி இல்லைப் பாருங்கோ.....

வந்து நிக்கிறவை "பில்லியன்" கணக்கான "ப்ரொஜெக்ற்" கட்டடத்துக்கு "பெயின்ற்" வாங்க வந்தவையாம்... பிற்காலத்தில பொதுமக்கள் பாவனைக்கு விடப் போற கட்டடம் அது... பொது மக்களின் வரிப்பணத்தில் தான் கட்டுப்படுகுது.... "என்ன மாதிரி.....? வந்தவர் நேராவே கேட்டார்.... "ஓம் ரீ.ஓ.... கடையளுக்குப் போடுற மாதிரி நாப்பது வீதம் தாறம்.... முப்பதை பில்லில காட்டுறம்...." எனக்கு அப்பவே எங்கயோ இடிக்கிற மாதிரித் தான் இருந்தது... ஆனாலும் பேசாமல் காதை விசுக்கிப் போட்டு இருந்தன்.... வந்தவர் பதில் சொல்லேல்ல.... வந்தவரின்ர அமைதி கடைக்காரரைச் சங்கடத்துக்கு உள்ளாக்கியிருக்கும் போல...."பொறுங்கோ... "பொஸ்ஜ" கேட்டுட்டுச் சொல்லுறன்..." எண்டு "போஃனை" தூக்கிக் கொண்டு வெளியில போனவர்... வந்ததும் சொன்னார்... "அம்பது குடுக்கட்டாம்.... முப்பதை பில்லில போடுறம்.... " வந்தவரின்ர முகத்தில கடும் சந்தோசம் கொப்பளிச்சது அப்பிடியே தெரிஞ்சுச்சு.... "ம்... இந்த "லிஸ்ட்ஜ சைட்டுக்கு அனுப்புங்கோ....மற்றதைச் சாமானவே என்ர பெடியள் வருவாங்கள் அனுப்பி விடுங்கோ...." காரியம் கச்சிதமா முடிஞ்சுது....

அரசாங்க வேலைக்குக் கிடைக்கிற கழிவில.... ஐயா தன்ர தனிப்பட்ட "கொன்ராக்ட்" க்குப் "பெயின்ற" கொண்டு போறார்.... உதில ரெண்டு பிழை நடந்திருக்குப் பாருங்கோ.... ஒண்டு அரசாங்க வேலைக்கு லஞ்சம் வாங்கிறது... மற்றது... அரசாங்க வேலைகாரர் வெளியால வேலை செய்யுறது.... உப்பிடிப் போனால் "கவர்மென்ற்" வேலைத் தளத்தில இருக்கிற சாமான் "பிரைவேட் கொன்ராக்ட் சைட்"க்குப் போகாது எண்டு என்ன நிச்சயம்?

சரி, விசியத்துக்கு வருவம்.... அந்த டாக்குத்தரில சரி – பிழை இருக்கட்டும்... இவன் பெடி மூட்டி விட்ட தீ இப்ப நல்லாக் கொழுந்து விட்டு எரியுதோ.. இல்லையோ... பெரியாஸ்பத்திரியில வேலை செய்யுற "கொன்சல்ரன்" மார் உட்பட எல்லாருமே இப்ப "மணியடிச்சா சோறு" எண்டுமாப் போல "சார்ப் ரைம்"க்கு நிக்கினம்... பன்ரெண்டு அடிச்சாப் பிறகு தான் வெளிக்கிடுகினம்... "ஹொஸ்பிட்டல்" நேரத்தில வெளியால எந்தப் "பிரைவேற்" றிலும் ஆக்களைக் காணக் கிடைக்குதில்லை... அரசாங்க அலுவலகங்களில சின்னவரோ... பெரியவரோ... ஆரெண்டாலும் "போஃனை"க் கையில எடுத்தால் அதிகாரிகள் "அலேர்ட்" ஆகினம்.... ஆக மொத்தம் ஒரு மாற்றம் நடந்திருக்குதோ.. இல்லையோ.... ?

நவம்பர் 14 க்குப் பிறகும் மாற்றம் ஒண்டை எதிர்பார்க்கலாம் போல தான் கிடக்கு....

–நரமுனி–

# இந்தியா—கனடா உச்ச கட்ட இராஜதந்திர சிக்கல்

**இந்தியா கனடாவுக்கான தனது தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் பிற தூதரக அதிகாரிகளை நாடு திரும்புமாறு கேட்டுக் கொண்டதாகக் கூறியிருக்கிறது. ஆனால் கனடா அவர்களை வெளியேற்றியதாகக் கூறியுள்ளது**

கடந்த ஆண்டு கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டது தொடர்பான சர்ச்சை மீண்டும் தலைதூக்கியுள்ளது. இது இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே ராஜதந்திரச் சிக்கலை உருவாக்கியுள்ளது.

இம்முறை, நிஜ்ஜார் கொலை வழக்கில், கனடாவுக்கான இந்தியத் தூதர் சஞ்சய் வர்மாவின் பெயரையும் மற்ற இந்தியத் தூதரக அதிகாரிகளின் பெயரையும் கனடா தொடர்புபடுத்தியுள்ளது.

கனடாவின் குற்றச்சாட்டுகளை நிராகரித்த இந்தியா, டெல்லியில் இருக்கும் இந்தியாவுக்கான கனடா தூதர் ஸ்டீவர்ட் ராஸ் வீலர் உள்ளிட்ட 6 பேரை வெளியேற்ற முடிவு செய்துள்ளது.

இந்தியா கனடாவுக்கான தனது தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் பிற தூதரக அதிகாரிகளை நாடு திரும்புமாறு கேட்டுக் கொண்டதாகக் கூறியிருக்கிறது. ஆனால் கனடா அவர்களை வெளியேற்றியதாகக் கூறியுள்ளது.

கனடாவில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மீதும் தூதரக அதிகாரிகள் மீதும் குறிவைத்து குற்றம் சாட்டியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

திரும்ப அழைக்கப்பட்ட ஆறு அதிகாரிகள் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் இந்தப் பதற்றத்திற்கு மத்தியில், ஒருவரது பெயர் அடிக்கடி தலைப்புச் செய்திகளில் அடிபடுகிறது. அவர்தான் கனடாவுக்கான இந்திய தூதரான சஞ்சய் வர்மா.

கனடாவிலிருந்து இந்தியாவால் திரும்ப அழைக்கப்பட்ட ஆறு அதிகாரிகளில் இந்தியத் தூதர் சஞ்சய் வர்மாவும் ஒருவர். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், சஞ்சய் வர்மா இந்தியாவின் மூத்த ராஜதந்திரி என்றும், அவர் 36 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார் என்றும் கூறியிருக்கிறது.

அதேநேரம், தூதரக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டப் ராஜாங்கச் சட்ட விலக்கினை **(diplomatic immunity)** நீக்கவும், விசாரணைக்கு ஒத்துழைக்கவும் இந்தியா மறுத்துவிட்டதாகவும், அதன் பின்னரே அவர்களை





வெளியேற்ற முடிவு எடுக்கப்பட்டதாகவும் கனடா கூறுகிறது.

**யார் இந்த சஞ்சய் குமார் வர்மா?**

இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் தகவலின் படி, 1965-ஆம் ஆண்டு பிறந்த சஞ்சய் குமார் வர்மா, பாட்னா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தார்.

அதன் பிறகு டெல்லி ஐ.ஐ.டி-யில் இயற்பியலில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1988-ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுத் துறைப் பணிக்குத் தேர்வானார்.

30 ஆண்டுகளுக்கும் மேலான சஞ்சய் வர்மாவின் ராஜதந்திரப் பணி ஹாங்காங்கில் உள்ள இந்திய உயர் ஆணையத்தில் இருந்து துவங்கியது. அதன் பிறகு சீனா, வியட்நாம், மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் பணியாற்றினார்.

இத்தாலியில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரியாகப் பணியாற்றுவதற்கு முன்பு, அவர் சூடானுக்கான இந்திய தூதராக இருந்தார்.

சூடானில் இருந்து இந்தியா திரும்பிய அவரை, இந்திய அரசு முதலில் வெளியுறவு அமைச்சகத்தின் இணைச் செயலாளராகவும், பின்னர் கூடுதல் செயலாளராகவும் நியமித்தது.

இதன் பிறகு, 2019-ஆம் ஆண்டு மே மாதம், அவர் ஜப்பானுக்கான இந்தியத் தூதரானார். 2022-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை அப்பணியில் இருந்தார்.

அதன் பிறகு, கனடாவுக்கான இந்திய உயர் ஆணையராக வர்மா நியமிக்கப்பட்டார்.

பெங்காலி பேசும் சஞ்சய் வர்மா, இந்தி, ஆங்கிலம், மற்றும் சீன மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

சஞ்சய் வர்மாவின் மனைவியின் பெயர் குஞ்சன் வர்மா. இவர்களுக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

இந்த ஆண்டு ஜூன் மாதம், கனடா நாடாளுமன்றக் குழு அறிக்கை ஒன்று, கனடாவின் ஜனநாயகத்திற்கு சீனா மிகப்பெரிய அச்சுறுத்தல் என்றும், இரண்டாவது பெரிய வெளிநாட்டு அச்சுறுத்தல் இந்தியா என்றும் விவரித்திருந்தது.

கனடா தேசியப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழுவின் நாடாளுமன்ற அறிக்கையில், கனடாவில் இந்தியாவின் தலையீடு படிப்படியாக அதிகரித்து வருவதாகக் கூறப்பட்டிருந்தது.

கனடா தலைவர்கள், ஊடகங்கள் மற்றும் இந்திய-கனடா கலாசார சமூகங்களை இந்தியா குறிவைப்பதாக அந்த அறிக்கை குற்றம் சாட்டியிருந்தது.

அப்போது ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் பேசிய கனடாவுக்கான இந்தியத் தூதர் சஞ்சய் வர்மா அந்தச் செய்தியை நிராகரித்திருந்தார்.

நியாயமான விசாரணைக்கு இந்தியாவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும், சாட்சிகளைக் குறுக்கு விசாரணைக்குக் கூட அனுமதிக்கவில்லை என்றும் அவர் அதில் கூறியிருந்தார்.

“இந்த அறிக்கை இந்தியாவுக்கு எதிரான சக்திகளின் தூண்டுதலால் வெளியிடப்பட்டது. நீங்கள் ஆதாரத்தை வழங்க வேண்டும். ஆனால் இதில் நான் அப்படி எதையும் பார்க்கவில்லை,” என்று கூறியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்றும், கனடாவின் அமைப்புகள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைச் சேதப்படுத்த விரும்புவதாகவும் அவர் கூறியிருந்தார்.

ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் பேசிய வர்மா, “காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு நிறைய அரசியல் இடத்தை கனடா வழங்கியுள்ளது. எனவே அவர்கள் தங்கள் பினாமிகள் மூலம் இந்த முழுச் செயல்முறையையும் தூண்டியிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்,” என்று கூறியிருந்தார்.



# அநுர அரசின் உண்மை முகம் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டுகின்றார்



தமிழர்கள்மீதான இனப்படுகொலைக்கு உள்நாட்டு ரீதியாக மட்டுமே பொறுப்புக் கூறலை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சரவை தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமை ஊடாக அநுர அரசாங்கத்தினுடைய உண்மையான இனவாத முகம் வெளிச்சத்துக்கு வந்திருப்பதாகவும், 2009 யுத்தத்துக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களை விடவும் இந்த ஆட்சியாளர்கள் மிக மோசமான ஆட்சியாளர்களாக இருப்பதாகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து பேசிய கஜேந்திர குமார் பொன்னம்பலம், "கடந்த காலங்களில் செயற்பட்ட அரசாங்கங்கள் போல் அல்லாமல், தாங்கள் எல்லாவிதத்திலும் வித்தியாசமான அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதாகவும்அதனடிப்படையில் கடந்த அரசாங்கங்களால் இன ரீதியாக பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் தங்களுடைய ஆட்சிக்காலத்தில் அவ்வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்றவாறான கருத்துருவாக்கத்தை கணிசமான அளவில் தேசிய மக்கள் சக்தியினர் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

"இவ்வாறானதொரு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுவரும்நிலையில்தான், கடந்த 7 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தில், தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு உள்நாட்டு ரீதியாக மட்டுமே பொறுப்புக்கூறலை மேற்கொள்ள வேண்டும் என கூறியிருக்கிறது இந்த அரசாங்கம்" என்று சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "இலங்கையின் அரசாங்கங்கள் கடந்த காலங்களில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்து வந்திருக்கிறது என்பது அனைவரும்அறிந்ததே" என்றும், "ஆனால்,இம்முறைதான்முதல்முறையாக ஒரு அமைச்சரவை தீர்மானத்தை நிறைவேற்றி ஜெனீவா தீர்மானத்தை எதிர்ப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றார் ரவூப் ஹக்கீம்



பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளருமான ரவூப்ஹக்கீம் கண்டியில் தெரிவித்துள்ளார்.

இது தனது தனிப்பட்ட கருத்தாக இருந்தாலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையும் இது தொடர்பில் தமது இணக்கத்தை வெளிப்படுத்தும் என்று நம்புவதாகவும் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

"நாடாளுமன்ற தேர்தல் ஜனாதிபதி தேர்தலில் இருந்து முற்றிலும் மாறுபட்டது" என்று சுட்டிக்காட்டிய ரவூப் ஹக்கீம், "விகிதாசார வாக்கு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் நான்கு ஜனாதிபதித் தேர்தல்களில் மாத்திரமே ஜனாதிபதியாக வெற்றி பெற்ற கட்சி பொதுத் தேர்தலில் குறைந்தபட்ச பெரும்பான்மையைப் பெற முடியாமல் போனது" என்றும் குறிப்பிட்டார்.

"தேசிய மக்கள் சக்தி இம்முறையும் குறைந்தபட்ச பெரும்பான்மையைப் பெறாது என்பதை திண்ணமாக கூறலாம்" என்றும்தெரிவித்த ஹக்கீம், "தேசிய மக்கள் சக்தியில் வேட்பாளருக்கான பட்டியலைப் பார்க்கும்போது, மக்களுக்குத் தெரிந்த பிரபல அரசியல் பிரமுகர்கள் குறைவு" என்றும், "திறமையும் அனுபவமும் உள்ளவர்கள்நாடாளுமன்றம்செல்ல வேண்டும் என்பதே மக்களின் கருத்தாக உள்ளது" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

"தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் பாரிய குறைபாடுகள் உள்ளன" என்று சுட்டிக்காட்டிய ஹக்கீம், "பொதுத் தேர்தலில் யார் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தாலும் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்" என்றும் கூறினார்.



# மருதாணி மற்றும் ஊடகச் செயலமர்வு கேகாலை மண்ணில்!



(சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ்)

எகோ ஹெனா ஆர்ட்ஸ் மற்றும் ஆர் ஜே மீடியா வலையமைப்பும் இணைந்து வழங்கிய மருதாணி மற்றும் ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான ஒருநாள்செயலமர்வு கொடியாகும்புர எம் ஆர் வரவேற்பு மண்டபத்தில்அண்மையில் இடம்பெற்றது .

இந்த அமர்வில் மருதாணி சார்ந்த விரிவுரைகளை பல தேசிய விருதுகளை பெற்ற திருமதி நிஸ்பா நஸார் ,மற்றும் ஊடகத்துறை சார்ந்த விரிவுரைகளை ஆர் ஜே மீடியாவின் பணிப்பாளரும் பல தேசிய விருதுகளை பெற்ற வானொலி அறிவிப்பாளருமான ஏ எம். இன்சாப் அவர்களும்வழங்கியமை குறிப்பிடத்தக்கது

இதில் பல மாவட்டங்களில் இருந்தும் பலர் கலந்து கொண்டதுடன் பங்குபற்றிய அனைவருக்கும் பெருமதியான சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.







## சவால்களின் மத்தியிலேயே பார்வையற்றோரின் பயணம்




ஒக்டோபர்-15 சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம். வெள்ளைப் பிரம்பு தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தில் ஏற்படுத்தி பார்வையற்றோர் வாழ்வினை ஆரோக்கியப்படுத்துவதே இத்தினம் அனுடிக்கப்படுவதன் நோக்கமாகும்.

இன்றும் பார்வையற்றவர்களின் வாழ்க்கை பயணம் பல சவால்களுக்கு மத்தியிலேயே நகர்கின்றது. சகல இடங்களிலும் பார்வையற்றவர்கள் பல இடர்பாடுகளுக்கு மத்தியிலேயே ஊடாடுகின்றனர். இந்த இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு சமூகத்தவர்களின் உதவி இன்றியமையாததாகின்றது.

எனவே வெள்ளைப்பிரம்புடன் ஒருவரைக் காணுமிடத்து அவருக்கு வேண்டிய உதவிகளை வழங்கி அவருடைய பயணத்தை ஆரோக்கியப்படுத்துவோம் என மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையமான கருவி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாது,

“குறிப்பாக மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் மத்தியில் வெள்ளைப்பிரம்பின் பயன்பாடு, பாவணை ஆகியவை தொடர்பில் பொருத்தமான விழிப்பூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசியப்பாடு காணப்படுகின்றது.

இந்த விடயத்தை கருவி நிறுவனத்தைச் சார்ந்த பார்வையற்ற அங்கத்தவர்கள், அனுபவ ரீதியாக வெளிப்படுத்தியுள்ளனர். கருவி நிறுவனம் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

யவெள்ளைப்பிரம்பு என்பது பார்வையற்றவர்களின் ஓர் அடையாளச் சின்னமாகும். வெள்ளைப்பிரம்பானது பொதுமக்களை விழிப்பூட்டிப் பார்வையற்றவர்களின் நடமாடுதலை வளப்படுத்துகின்றது. நாம்ஒவ்வொருவரும் இயலுமானளவு பார்வையற்றவர்களுக்கு உதவி புரிந்து அவர்களின் வாழ்வை ஆரோக்கியப்படுத்துவோம்” என்றுள்ளது.

# இன்று பனங்காட்டில் பனம் விதைகள் நட்டு வைப்பு அம்பாறை மாவட்டத்தில் 5000 விதைகள் நடும் திட்டம்








(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் இயற்கை வளங்களை பாதுகாக்கும் முகமாக 5000 பனம் விதைகளை நடும் திட்டம் இன்று புதன்கிழமை பனங்காட்டில் முதற் கட்டமாக ஆரம்பமாகியது. அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனங்காடு தில்லையாற்று பகுதியில் முதற் கட்டமாக 1200 பனம் விதைகள் இன்று நடப்பட்டன.

நிகழ்வில் அமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன், திட்ட இணைப்பாளர் திருமதி அனிதா செல்வகுமார், களப்பணியாளர் திருமதி நிஷாகரி பிரதீபன், ஆலையடிவேம்பு பிரதேச செயலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் யு. எல் மஷ்மூதா, திருமதி எஸ். ஜனனி, அபிவிருத்தி உத்தியோகர் திருமதி பிருந்தாயினி , பனங்காடு சிறு குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு நடுகை செய்து வைத்தனர்.



# கலாசாலையில் உலக உளநல நாள் நிகழ்வுகள்







கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக உளநல நாளை ஒட்டிய சிறப்பு ஒன்று கூடல் இன்று புதன் காலை கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது

ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவி ஜெ. சுலோச்சனாதேவி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக உளவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. கஜவிந்தன் கலந்து கொண்டு எண்ணங்களின் வலிமை என்ற பொருளில் உரையாற்றினார்.

கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் அதிதி அறிமுகவுரையையும் ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவன் சி. டனிஸ்ரன் உளநல நாள் என்ற பொருளிலான உரையையும் ஆற்றினர். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

கலாநிதி க. கஜவிந்தன் தான் எழுதிய நூல்களின் ஒரு தொகுதியை நூலக பொறுப்பு விரிவுரையாளர் வேலும்மயிலும் சேந்தனிடம் கையளித்தார்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2024 இல் வெளியிடப்பெற்றது.